# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

மனு எண். **808/ந/2019** நாள் : **13/02/2020**

**திரு K. திருமுருகன்,**
**ஆற்காடு.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**ஆற்காடு நகராட்சி,**
**ஆற்காடு.** – **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், ஆற்காடு நகராட்சி, கொல்லபாளையம் தெரு, 28 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. திருமுருகன் என்பவர், தனது முந்தைய முறையீட்டு மனு சம்பந்தமாக இம்முறைமன்ற நடுவம் பிறப்பித்த முறையீட்டு மனு எண்.29/நகராட்சி/2019, நாள் 14.06.2019 ஆணையை மறு ஆய்வு செய்யக்கோரி தாக்கல் செய்த மனு 08.07.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், ஆற்காடு நகராட்சி, கொல்லபாளையம் தெரு, 28 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு K. திருமுருகன் என்பவர் தனது 15.02.2019 நாளிட்ட முறையீட்டு மனுவில் தனிநபர்களின் விவகாரத்தில் ஆற்காடு நகராட்சி ஆணையர் தலையிட்டு ரூ. 1,56,140/–ஐ தன்னிச்சையாக செலவு செய்து அரசிற்கு இழப்பினை ஏற்படுத்தியதற்கு மேற்குறிப்பிட்ட அலுவலரின் சுயலாபம், கைமாறிய கையூட்டு மற்றும் மேலிடத்து அழுத்தமே காரணம் எனத் தெரிவித்து இது சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்திருந்தார். மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனுவினை பரிசீலித்த இம்முறைமன்ற நடுவம், சம்பந்தப்பட்ட பொருட்பாடு குறித்த வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்ததால், நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள பொருட்பாடு குறித்து இம்முறைமன்ற நடுவம் விசாரணை ஏதும் செய்ய இயலாத நிலையில், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ன் படி மனுதாரரின் முறையீட்டு மனுவினைத் தள்ளுபடி செய்து 14.06.2019 நாளிட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட ஆணையினை மறு ஆய்வு செய்யக்கோரி, மனுதாரர் திரு K. திருமுருகன் கீழ்க்காணும் காரணங்களைக் குறிப்பிட்டு மனுவினைத் தாக்கல் செய்துள்ளார் :-

(1) மாத வாடகை ரூ.15,000/– வழங்கியதாக தவறாக ஆணையில் குறிப்பிடப் பட்டுள்ளது ;

(2) 4/2019 எண்ணிட்ட எந்த வழக்கும் முறையீட்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்படவில்லை ;

(3) நிலையாணைகள் (Speaking orders) என்ற பெயரில் உயர்நீதிமன்றம் எந்த உத்தரவும் பிறப்பிக்காத நிலையில் முறைமன்ற நடுவம் வழக்குகளை காரணம்

காட்டி தன்னுடைய மனுவினை ஒருதலைப்பட்சமாக தள்ளுபடி செய்திருப்பது மறுபரிசீலனைக்குரியது ;

(4) முறைமன்ற நடுவ ஆணையில் "முடிவு செய்து" என்ற சொற்றொடர் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது ;

(5) தான் முறைமன்ற நடுவத்தில் தாக்க செய்த மனுவிற்கும் 5005/2019 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவிற்கும் எந்த தொடர்பும் கிடையாது ;

(6) எதிர்மனுதாரரின் அறிக்கையை தனக்கு வழங்கி விளக்கம் அளிக்க வாய்ப்பு அளிக்காமல் திட்டமிட்டு தீர்ப்பாயம் இயற்கை நியதிக்கு முரணாக செயல் பட்டது ;

(7) தனது வழக்கினை மறு ஆய்வு செய்து உண்மையான குற்றவாளியான எதிர்மனுதாரருக்கு தண்டனை வழங்க பரிந்துரை செய்யக் கோருவது.

2. மனுதாரரின் மேற்குறிப்பிடப்பட்ட மறு ஆய்வு மனு பரிசீலிக்கப்பட்டது. இந்நேர்வு சம்பந்தப்பட்ட கட்டடத்தினை இடித்து அகற்றப்படுவது சம்பந்தமாக திரு R. ஹாசன் அலி அக்பர் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மற்றும் தனியர்களான மனுதாரர் மற்றும் திருமதி மலர் ஆகியோர் தாக்கல் செய்திருந்த 17407/2018 மற்றும் 17408/2018 எண்களிட்ட நீதிப்பேராணை மனுக்களில் சென்னை உயர்நீதிமன்றம் 04.09.2018-ஆம் நாளன்று பொதுவான ஆணையினை (Common order) பிறப்பித்துள்ளது. மேற்குறிப்பிட்ட ஆணையில் கீழ்க்காணும் குறித்துரை பதிவு செய்யப்பட்டுள்ளது :-

"Today when the matters were taken up for hearing, the petitioner in W.P.NO.17407/2018 has made the following endorsement:

It is submitted that we will collect the vessels from the 4th Respondent's place within one week without prejudice to my any other legal right.

Recording the aforesaid fact and the endorsement to made, the petitioner in W.P.No.17407/2018 (R5 in W.P.No.5484/2016) shall collect his belongings / vessels / articles etc. from the 4th Respondent / Municipality within a period of one week from the date of receipt of copy of this order. Likewise, in respect of the petitioner in W.P.No.17408/2018, if any vessels / articles belonging to her is in the custody of the 4th Respondent / Municipality, then, it is open to her to collect the same from the 4th Respeondent / Municipality. "

மேற்குறிப்பிடப்பட்ட தீர்ப்பினைத் தொடர்ந்து, அனுமதியற்ற கட்டுமானத்தை அகற்றும் நடவடிக்கையினால், நகராட்சி ரூ. 1,56,140/- செலவிட்டுள்ளது என்றும், செலவு செய்யப்பட்ட மேற்குறிப்பிடப்பட்டத்தொகையினை 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவுகள் 317, 338, 339 மற்றும் 344 ஆகியவற்றின்கீழ் நகராட்சிக்கு செலுத்திய பின்பு அப்பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறு <u>**நகராட்சி ஆணையர் தனது 17.12.2018 நாளிட்ட கடித அறிவிப்பில்**</u> மனுதாரருக்கு தெரிவித்துள்ளார். நகராட்சி ஆணையரின் மேற்குறிப்பிடப்பட்ட அறிவிப்பிற்கு, மனுதாரர் தனது 21.12.2018 நாளிட்ட கடிதத்தில் நகராட்சியில் செலவிடப்பட்ட தொகை ரூ.1,56,140/-ஐ நகராட்சிக்கு தான் அளிக்க வேண்டுமென்று மேற்படி வழக்குகளின் தீர்ப்பில் குறிப்பிடப்படவில்லை என்றும், எனவே, நகராட்சி கடித அறிவிப்பில் கோரப்பட்டுள்ள தொகையை தான் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய அவசியமோ, கட்டாயமோ எழவில்லை எனத் தெரிவித்துள்ளதுடன். தனது கடையின் பூட்டை உடைத்து அத்துமீறி நுழைந்து 07.07.2018 அன்று வியாபாரப் பொருட்களை எடுத்துச் சென்ற தேதியிலிருந்து நாளொன்றுக்கு ரூ. 7,000/- வீதம் வழக்கு தாக்கல் செய்யும் நாள் வரை மாதமொன்றுக்கு ரூ.2/- வட்டி வீதம் சேருகின்ற பணத்தை தனது கடையின் வியாபார பொருட்களை ஒப்படைக்கும் தேதி வரையிலான தொகையினையும் இழப்பீடாக தனக்கு வழங்க ஆணையிடக் கோரியுள்ளதுடன், கடையின் திறவு கோலினையும் வியாபாரப் பொருட்களையும் தனக்குத் திருப்பித் தருவதற்கு செயலுறுத்துக் கட்டளை வழங்கக் கோரி நகராட்சி ஆணையருக்கு எதிராக மனுதாரர் தாக்கல் செய்துள்ள 4/2019 எண்ணிட்ட அசல் மனு வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

3. இந்நேர்வின் மனுதாரர், இம்முறைமன்ற நடுவ ஆணையில் அசல் மனு எண்.4/2019 என குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றும், இது மன்றத்தின் கற்பனையான வழக்கு என்றும், தான் எந்தவொரு வழக்கையும் எதிர்மனுதாரருக்கு எதிராக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை என்று தனது மறு சீராய்வு மனுவில் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிடப்பட்ட மனுதாரரின் கூற்று உண்மைக்குப் புறம்பாக உள்ளது. ஏனெனில், மனுதாரர் 230/2018 எண்ணிட்ட அசல் வழக்கு ஒன்றினை வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் 10.12.2018—இல் தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கு பின்னாளில் 4/2019 எண்ணிட்ட அசல் வழக்காக இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், இராணிப்பேட்டை நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இவ்வழக்கின் எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையாளர் தனது எதிர் வாதுரையினை 04.07.2019 அன்று தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் 4/2019 எண்ணிட்ட வழக்கு இம்முறைமன்ற நடுவத்தின் கற்பனையான வழக்கு அல்ல. 1920—ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவுகளின் கீழ் நகராட்சி ஆணையாளர் வழங்கிய அறிவிப்பினைத் தொடர்ந்து மனுதாரர் தாக்கல் செய்த இவ்வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரரின் முறையீடு குறித்து இம்முறைமன்ற நடுவம் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ள இயலாது. எனவே, இந்நேர்வில், ஏற்கனவே இம்முறைமன்ற நடுவத்தால் 14.06.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையினை மறு ஆய்வு செய்யும் அவசியம் ஏதும் தற்போது எழவில்லை. எனவே, மனுதாரரின் மேற்படி மறு ஆய்வு மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2020—ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 13—ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 18.2.20

17.2.2020

18/2/2020

பெறுநர்

1. திரு K. திருமுருகன்,
எண்.28, கொல்லபாளையம் தெரு,
ஆற்காடு, நகரம்
வேலூர் மாவட்டம்.

2. நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி,
ஆற்காடு,
வேலூர் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி